இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

பிரான்ஸ் முழுவதிலிருந்தும் திரண்டு வந்திருந்த 80,000 க்கும் அதிகமான இளைஞர்களின் உற்சாகமும், மகிழ்ச்சியும், நம்பிக்கையும் அங்கே வெளிப்பட்டன. முக்கியமாக அந்த நம்பிக்கையை அவர்கள் பெற்றுக்கொண்டார்கள், இனி அதை மற்றவர்களோடும் பகிர்ந்துகொள்வார்கள்.

'கிளிக்பேட் (கவர்ச்சிச் செய்திகள்) காலத்தில் விழிப்புடன் கவனம் செலுத்துவோம்' – 2027 உலகத் தொடர்புதினக் கருப்பொருள்

வத்திக்கான் ஊடகத் செயலகம் (Dicastery for Communication) 2027-ஆம் ஆண்டின் 61-வது உலகத் தொடர்புதினத்திற்கான கருப்பொருளை வெளியிட்டுள்ளது. அது: "புதிய பார்வையாக 'கிளிக்பேட்' காலத்தில் கவனம் செலுத்துதல்" என்பதாகும்.

அதிதூதர் புனித கேப்ரியேலின் பெருவிழா நாளில், திருப்பீடத்தின் ஊடகத் செயலகம் 61-வது உலகத் தொடர்புத்தினத்திற்கான அதிகாரப்பூர்வ கருப்பொருளை வெளியிட்டது.

இவ்வாண்டின் கருப்பொருள், "நம் பார்வையை மனமாற்றத்திற்கு உட்படுத்தி: கவனத்தோடும் அன்போடும் மீண்டும் பார்க்க" அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் அழைப்பு விடுக்கிறது.

"முழுவில்லாமல் வேகமாக ஓடும் தகவல்களுக்கு மத்தியில், மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக நடக்கும் போட்டிகள், நமது சிந்தனைத் திறனை மட்டுமன்றி, மனிதர்களுக்கு இடையிலான உறவின் ஆழத்தையும் மாற்றியமைக்கிறது" என்று அச்செய்திக்குறிப்பு சுட்டிக்காட்டுகிறது.

மற்றவர்கள் மீது அன்போடு கவனம் செலுத்துவதன் மூலமே, "உலகையும், பிறரையும், ஏன் நம்மையே கூட கிறிஸ்து பார்ப்பது போல – பெயர் சொல்லி அழைக்கப்பட்டவர்களாகவும் நேசிக்கப்படுபவர்களாகவும் – நம்மால் பார்க்க முடியும்."

"மற்றவர்களைத் தீர்ப்பிடுவதற்குப் பதிலாக, அவர்களை நேரில் சந்தித்து உறவாட நமது பார்வை முனையும் போது, நமது தொடர்பு முறையே மாறுகிறது" என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய டிஜிட்டல் உலகில், உடனடி எதிர்வினைகளும் ஆழமற்ற உறவுகளுமே மனிதர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றன. இதனால் உண்மையான கவனம் செலுத்தும் பண்பு குறைந்துபோகிறது.

"ஆனால், கவனம் செலுத்துவது என்பது ஒரு விலையேறப்பெற்ற தாராள குணத்தைக் குறிக்கிறது. 'கவனம்' (Attention) என்ற சொல் 'அட்-தெண்டரே' (ad-tendere) என்ற மூலச்சொல்லிலிருந்து வந்தது; இதற்கு 'மற்றவர்களையும் உண்மையையும் நோக்கி கரம் நீட்டுதல்' என்று பொருள்.

மற்றவர்களின் கவனத்தைக் கவர்வதை விட, "உறவுகளுக்கான விலையேறப்பெற்ற வளமாக அந்த கவனத்தைப் பாதுகாப்பதே" தொடர்பு தினத்தின் உண்மையான நோக்கமாகும்.

இந்தக் 'கிளிக்பேட்' யுகத்தில், கிறிஸ்தவர்கள் விழிப்புடன் இருந்து, ஒருவருக்கொருவர் ஆரோக்கியமான முறையில் கவனம் செலுத்தும் பண்பைக் கண்டறிய அழைப்பு விடுக்கப்படுகிறார்கள்.

"தொடர்பு என்பது வெறும் வார்த்தைகள் சார்ந்ததல்ல. அது மனிதரின் முழு ஆளுமையையும் உள்ளடக்கியது. கிறிஸ்துவின் அழைப்பிற்குப் பதிலளிக்கும் பொருட்டு, நாம் மீண்டும் பார்க்கவும், கேட்கவும், உணர்ந்து செயல்படவும் அது நம்மைக் கேட்கிறது" எனக் குறிப்பிட்டு அச்செய்திக்குறிப்பு நிறைவு பெறுகிறது.

2027-ஆம் ஆண்டின் உலகத் தொடர்பு நாள் மே 9 அன்று அமெரிக்கா, இங்கிலாந்து, வேல்ஸ், பிரான்ஸ், ஸ்பெயின், போலந்து, இத்தாலி போன்ற உலகின் பல பகுதிகளில் கொண்டாடப்படவுள்ளது. இருப்பினும், பிற நாடுகளில் அந்தந்த ஆயர் பேரவைகளின் முழுவிற்கு ஏற்ப வெவ்வேறு நாட்களிலும் இது கொண்டாடப்படும்.

தமிழக்கம் ஹெரால்டு



திருத்தந்தையின் பிரான்ஸ் பயணத்தையொட்டிய கருத்துகள்



பிரான்ஸ் நாட்டிற்கான தமது திருத்தூதுப் பயணத்தை முடித்துக் கொண்டு, மெட்ஸ் (Metz) நகரிலிருந்து ரோம் நகருக்குத் திரும்பும் விமானத்தில் செய்தியாளர்களிடம் பேசிய திருத்தந்தை 14-ஆம் லியோ, போர்கள் குறித்தும் அதற்குப் பின்னணியில் இருக்கும் பொருளாதார சுயநலன்கள் குறித்தும் பேசினார். "திருஅவை நற்செய்தியைப் அறிவிப்பதில் தொடர்ந்து உரக்கக் குரல் கொடுக்கும். ஆயுதப் பெருக்கத் தொழிலால் ஒருசிலரே பெரும் பணக்காரர்களாகி வருகின்றனர்; இந்த பில்லியன் கணக்கான பணத்தைக் கொண்டு உலகப் பசி போன்ற பெரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்" என்று அவர் கூறினார்.

பிரான்ஸ் பயணத்தின் ஒட்டுமொத்தப் பார்வையை முதற்கண் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை, தொடர்ந்து செய்தியாளர்களின் பல கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

"முதன்முதலாக, நீங்கள் ஆற்றிய தீவிரமான பணிக்காக மீண்டும் ஒருமுறை என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த நான்கு நாட்களாக நீங்கள் மிகவும் பரபரப்பாக இருந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்; ஒருவகையில் இது மிகவும் தீவிரமான அட்டவணையாக அமைந்தது.

இந்த நான்கு நாட்களும் இறைவனின் பலதரப்பட்ட ஆசீர்வாதங்களால் நிறைந்திருந்தன. குறிப்பாக, லூர்து நகரில் அத்தனை நோயாளிகளுடனும் வேதனையுறும் மக்களுடனும் இணைந்து பயணித்தது, இறைவனின் அருட் பிரசன்னம் பல்வேறு வழிகளில் வெளிப்பட்டு மக்களின் இதயங்களைத் தொட்டது, அவர்களின் வாழ்க்கையை உருமாற்றியது, நோயாளிகளுக்கும் முதியோர்களுக்கும் மற்றும் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவர்களுக்கும் மீண்டும் ஒரு கண்ணியத்தை மீட்டெடுத்தது ஆகியவற்றை நேரடியாகக் கண்டது கிட்டத்தட்டப் புதுமைகளுக்குச் சமம் என்றே நான் சொல்வேன்.

எனவே, இந்த நான்கு நாட்களிலும் பல அடையாளங்கள், வெளிப்பாடுகள் மற்றும் ஆன்மீகக் குறியீடுகளைக் காண முடிந்தது. குறிப்பாக வாழ்க்கையில் ஏதோவொன்றைத் தேடிக்கொண்டிருக்கும் இளைஞர்களை ஊக்கப்படுத்துவதற்காகப் பிரான்ஸ் நாட்டிற்கு வருகை தந்த பாக்கியத்தைப் பெற்றதை எண்ணி தனிப்பட்ட முறையில் நான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டதாக உணர்கிறேன்.

விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற நிகழ்வில் அது மிகத் தெளிவாகத் தெரிந்தது. பிரான்ஸ் முழுவதிலிருந்தும் திரண்டு வந்திருந்த 80,000 இளைஞர்களின் உற்சாகமும், மகிழ்ச்சியும், நம்பிக்கையும் அங்கே வெளிப்பட்டன. முக்கியமாக அந்த நம்பிக்கையை அவர்கள் பெற்றுக்கொண்டார்கள், இனி அதை மற்றவர்களோடும் பகிர்ந்துக்கொள்வார்கள்."

முன்னதாக, திருஅவையில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானவரிடம் திருத்தந்தை பேசியதைக் குறித்துக் கேட்கப்பட்டதற்கும் திருத்தந்தை பதிலளித்தார்.

முதன்முதலாக, அந்த ஏழு பாதிக்கப்பட்ட நபர்களைச் சந்தித்தபோது, பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்களால் அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட ஆழமான வேதனையையும் காயங்களையும் உணர்ந்து, அவர்களிடம் ஒரு கோரிக்கையை வைத்தேன். அதாவது, பிற பாதிக்கப்பட்ட நபர்களிடமும் இறங்கிவந்து செவிமடுக்கவும், அவர்களின் குணமளிப்புப் பயணத்தில் அவர்களோடு இணைந்து பயணிக்கவும் எனக்கும் திருஅவைக்கும் உள்ள விருப்பத்தையும் மனநிலையையும் தெரிவிப்பதற்கு எனக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டேன்.

அவர்களில் சிலர், இது அமைப்பால் ஏற்பட்ட முறையான சீரழிவு அல்லது துஷ்பிரயோகம் (Systemic abuse) என்று குறிப்பிட்டார்கள். தனிப்பட்ட முறையில், நான் இதை வேறு ஒரு வழியில் வெளிப்படுத்தவே விரும்புகிறேன். அதேவேளையில், திருஅவைக்குள் இருக்கும் சில அமைப்புகள் அல்லது நிறுவனங்கள் சில நேரங்களில் ஒரு கூட்டமைப்பாகத் தவறாக நடந்து கொண்டிருக்கின்றன என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஆனால், இதில் உள்ள வேறுபாட்டை நாம் புரிந்து கொள்வது மிகவும் முக்கியம் என்று நினைக்கிறேன். பாலியல் துஷ்பிரயோகம் என்பது முதலாவதாக மனித குலத்தைச் சார்ந்த ஒரு பொதுவான பிரச்சினையாகும். ஆனால், அதே துஷ்பிரயோகம் திருஅவைக்குள் நடக்கும் போது, அதற்கு இன்னொரு பெரிய பரிமாணம் கூடுகிறது; ஏனெனில், அது மக்களின் விசுவாச வாழ்வை ஆழமாகக் காயப்படுத்துகிறது, சில நேரங்களில் அதை முழுமையாகவே அழித்துவிடுகிறது.

எனவே, பாதிக்கப்பட்டவர்களோடு இணைந்து பயணிப்பதும், அவர்கள் மன மற்றும் ஆன்மீகக் குணமடைதலைப் பெற உதவுவதும் திருஅவையின் மிக முக்கியப் பொறுப்பாகும். அந்த வகையில் தான், திருஅவை சில வழிகளில் இதற்குப் பொறுப்பாகப் பார்க்கப்பட்டாலும், அதே திருஅவையே அவர்கள் மீண்டும் குணமடைய உதவுவதிலும் ஒரு முக்கியப் பங்காற்ற முடியும் என்பதைப் பற்றி நான் உரையாடினேன்." என தெரிவித்தார்.

தமிழாக்கம் ஹெரால்டு.

பாலியல் துன்புறுத்தலுக்குள்ளானவர்களைத் திருத்தந்தை சந்தித்தார்



திருத்தந்தை 14-ஆம் லியோ, குருக்களால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட நான்கு ஆண்கள் மற்றும் மூன்று பெண்களை லூர்து நகரில் சந்தித்துப் பேசினார்.

பாதிக்கப்பட்ட இந்த ஏழு நபர்களும் பங்குகள், விடுதிப் பள்ளிகள், துறவறச் சபைகள் அல்லது திருஅவை இயக்கங்களில் இத்துயரத்திற்கு ஆளானவர்கள் ஆவர்.

வெவ்வேறு வாழ்க்கை பின்னணியைக் கொண்ட இவர்களின் பாதைகள் முதன்முதலாகச் செப்டம்பர் 14 அன்று ஒன்றாக இணைந்தன. அன்று அவர்கள் அனைவரும் நேரில் சந்தித்து, ஒருவரையொருவர் அறிந்துகொண்டு, திருத்தந்தையிடம் பகிர்ந்து கொள்ள வேண்டிய தங்கள் அனுபவங்கள், எதிர்பார்ப்புகள் மற்றும் கோரிக்கைகள் குறித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பு, லூர்து அன்னை திருத்தலத்திற்குச் மிக அருகிலுள்ள ஆயர் இல்லத்தில் மாலை 5:30 மணி முதல் 7:30 மணி வரை சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்றது.

பிரெஞ்சு ஆயர் பேரவையின் குழந்தைப் பாலியல் துன்புறுத்தல் தடுப்பு மற்றும் போராட்டக் குழுவின் தலைவரும், ஏமியன்ஸ் (Amiens) மறைமாவட்ட ஆயருமான ஜெரார்ட் லே ஸ்தாங் (Gérard Le Stang) அவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

இந்தத் தீமை மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்தல்

இச்சந்திப்பு குறித்த பல விவரங்களைத் திருப்பீடச் செய்தித் தொடர்பகம் வெளியிட்டது.

"திருத்தந்தை பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரையும் தனித்தனியாகச் சந்தித்து உரையாடினர். அவர்களின் கதைகள், அவர்கள் அனுபவித்த வேதனைகள் மற்றும் துயரங்களைக் கேட்டறிந்தார். வருந்தத்தக்க வகையில், அவர்களுக்கு உதவியிருக்கக்கூடிய சிலரின் அமைதி அல்லது உடந்தையாலும் இத்துயரம் நடந்துள்ளது. மேலும், இதுபோன்ற கொடூரம் இனி ஒருபோதும் நிகழாமல் இருப்பதற்கான அவர்களின் ஆலோசனைகளையும் கேட்டறிந்தார். அவர்களில் சிலருடன் திருத்தந்தை சிறிது நேரம் அமைதியாகச் செபித்தார்"

சந்திப்பின் நிறைவில், இரவு 7 மணிக்கு மேல், "திருத்தந்தை ஆயர் இல்லத்தின் ஒரு அறையில் அனைவரையும் ஒன்றாகக் கூட்டி சில வார்த்தைகள் பேசினார். அவர்களின் வலிமிகுந்த சாட்சியத்திற்கு நன்றி தெரிவித்ததோடு, அவர்கள் அனுபவித்த இந்தத் தீமை மற்றவர்களுக்கு இனி நிகழாமல் இருப்பதை உறுதிசெய்யத் தாம் முழுமையாகக் கடமைப்பட்டிருப்பதாக மீண்டும் உறுதியளித்தார்" என்று செய்தித் தொடர்பகம் அறிவித்தது.

தொடர்ந்து, திருத்தந்தை பாதிக்கப்பட்ட அந்த நபர்களுக்கும், அவர்கள் வழியாக "துஷ்பிரயோகக் காயங்களால் இன்னமும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் பிற அனைத்து நபர்களுக்கும்" தனது அபோஸ்தலிக்க நெருக்கத்தையும் ஆறுதலையும் வெளிப்படுத்தினார்.

தமிழாக்கம் ஹெரால்டு

கோலாலம்பூர் மறைமாவட்ட மரியாளின் சேனைக் குழுவின் தியானம்





கோலாலம்பூர் மறைமாவட்ட (Regia) மரியாளின் சேனைக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த 19/9/26-ல் "மரியாவில் கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ்வோம்" என்ற தலைப்பில் கிள்ளான் புனித லூர்து அன்னை தேவாலயத்தில், காலை மணி 8.00 முதல் மாலை மணி 4.00 வரை தியானப்பயிற்சி நடைபெற்றது. இதில் சுமார் 180 முதல் 200 உறுப்பினர்கள் வரை கலந்துக் கொண்டனர். பல பங்குகளிலிருந்து சேனையர்களும் பங்கு மக்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு அருட்பணி. ஞானசெல்வம் அவர்கள் பொறுப்பேற்று வழிநடத்தினார். காலை தேநீர் சிற்றுண்டிக்குப் பிறகு கருத்தரங்கு ஆரம்பமானது. கபிரியேல் வானத்தூதரின் அறிவிப்புக்கு 'ஆம்' என்ற ஒரு வார்த்தையின் வழியாக இறைவனின் மீட்பித் திட்டத்தில் இடம் பெற்றார் அன்னை மரியாள். நாம் பிறந்து வளர்ந்து வாழ்க்கையில் சந்திக்கும் அல்லது மேற்கொள்ளும் ஒவ்வொரு பயணமும் நமது விண்ணக வாழ்வையே நோக்கியிருக்க வேண்டும் என்பதுதான் இறைவனின் திட்டம்.

ஆகஸ்ட் 15-ம் தேதி 'அன்னை மரியாவின் விண்ணேற்பு' திருவிழா திருப்பலியினை சிறப்பாகக் கொண்டாடுகிறோம். அன்னை மரியாவின் விண்ணேற்பில் என்ன நடந்திருக்கும், எப்படி இருந்திருக்கும், யாரெல்லாம் அன்னையின் விண்ணேற்பு மகிழ்ச்சியில் பங்குபெற்றிருப்பார்கள் என்பதையெல்லாம் நாம் நம் சொந்த கற்பனையில் தியானிக்க அழைக்கப்பட்டோம். புனித அல்போன்சஸ் லிகோரி அவர்கள், மிகவும் அழகான கற்பனை வளமிக்க ஒரு தியானத்தை எழுதியுள்ளார். என்பதை கூறி எங்களையும் தியானிக்க அழைத்துச் சென்றார் அருட்பணி ஞானசெல்வம் அவர்கள்.

மண்ணுலகில் இயேசுவுடன் வாழ்ந்த அன்னை; இயேசுவின் பிரிவுக்கு பிறகு இயேசுவோடு செல்ல ஏக்கம் கொண்டிருந்தார். "மீட்பு திட்டத்தில்" துயரம் கலந்த அறிவிப்பை கூறிய கேபிரியேல் தூதர் அன்னையின் விண்ணேற்றத்தில் "மகிழ்ச்சியான அறிவிப்பை கூறுகிறார் - 'அன்னையே உமது பூமிக்குரிய பயணம் நிறைவடையும் நேரம் நெருங்கிவிட்டது, கடவுள் உம்மை தம்மோடு விண்ணகத்தில் இருக்க அழைக்கிறார்". முதல் அறிவிப்பில் இயேசுவை தன் வயிற்றில் ஏற்றுக் கொள்ளத் தயாரானார். 2ம் அறிவிப்பில் இயேசுவின் முன்னிலையில் என்றென்றும் இருக்க அழைக்கப்படுகிறார் அன்னை.

அன்னையின் விண்ணக நுழைவு, இயேசுவோடு விண்ணக மகிழ்ச்சி என பூமியில் இயேசுவோடு தொடங்கிய அன்னையின் பயணம் விண்ணகத்தில் இயேசுவோடு நிறைவடைகிறது. விண்ணக குடும்பத்தின் வரவேற்பைப் பற்றி தியானித்தோம்.

மரியா -- வானத்தூதரின் வார்த்தையை கேட்டு "உமது வார்த்தையின்படியே எனக்கு நிகழட்டும் என்று கட்டளையை ஏற்றார். (எவ்வளவு அழகான சந்திப்பும்) தியானிக்கப்பட்டது - அன்னை மரியாவுக்கும் யோவானுக்கும் ஒரு தனிப்பட்ட ஆன்மீக தொடர்பு இருந்து. இயேசுவின் பிரசன்னம் யோவானுக்கு மகிழ்ச்சியையும் இறைநம்பிக்கையையும் தந்தது.இயேசுவை தாங்கியவர் இயேசுவின் முன்னிலையில், அன்னை மரியாவை மகிழ்வுடன் வரவேற்பதை தியானித்த போது கண்கள் கலங்கின. இறுதியாக திரித்துவத்தின் முன்னிலையில் அன்னை 'எல்லாம் உமது அருளே என்று மரியா இறைவனை நோக்கி தமது நன்றியை வெளிப்படுத்துகிறார். தந்தை - தம் அன்பு மகனை வரவேற்கிறார், மகன் - தம் அன்பு அன்னையை வரவேற்கிறார். தூய ஆவி - தம் ஆசியை பொழிந்து வரவேற்கிறார்.

தூய திரித்துவத்தின் மகிமையான வரவேற்பை பெற்றுக் கொண்டதும் மரியா மகிமையிலும் மாறாத தாழ்ச்சியோடும் விண்ணேற்றம் செல்வதை மிகவும் அருமையான அழகான ஆழமான தியானத்திற்கு எங்களைஅழைத்துச் சென்ற அருட்திரு ஞானசெல்வம் அவர்களுக்கு எங்கள் மரியாளின் சேனை குழுவினர் சார்பாக மிக்க நன்றி.

அன்னை மரியின் முன்மாதிரிகைகளை கடைப்பிடித்து சிறந்த பிள்ளைகளாகவும் சிறந்த சேனையர்களாகவும் வாழ்வோம்.

இறைவனின் அருளை நிறைவாக அடைவோம்.

ச.லில்லி பீட்டர்
பெஸ்தாரி ஜெயா

திருவிவிலியத்தை வாசிக்க எங்களைத் தூண்டிய தியானம்

16 செப்டம்பர் 2026 அன்று, தெலுக் இந்தானிலுள்ள புனித அந்தோணியார் ஆலயத்தில் இறைவார்த்தையை மையமாகக் கொண்ட அர்த்தமுள்ளதும் ஊக்கமளிப்பதுமான தியானம் நடைபெற்றது.

பொது விடுமுறை நாளாக இருந்தபோதிலும், 98 பேர் ஒன்றுகூடி, இறைவார்த்தையைக் கேட்டு, கற்று, அதன்மூலம் புதுப்பிக்கப்படுவதற்காக அந்த நாளைச் செலவிட்டனர். ஈப்போ, பிடோர் மற்றும் தைப்பிங் ஆகிய பங்குகளைச் சேர்ந்தவர்களும் இந்த ஆன்மீகப் பயணத்தில் எங்களுடன் இணைந்தது எங்களுக்கு ஒரு பெரிய ஆசீர்வாதமாக அமைந்தது.

இந்த தியானம் காலை 9.30 மணிக்கு திருப்பலியுடன் தொடங்கி மாலை 4.30க்கு நற் கருணை ஆசீர் ருடன் முடிவுற்றது. கோயம்புத்தூரைச் சேர்ந்த சகோதரர் மேத்யூ அவர்கள் இறைவார்த்தைக் குறித்த தியானத்தை வழி நடத்தினார். அவருடைய பகிர்வு திருவிவிலியத்தை அறிந்துகொள்வதைப் பற்றியது மட்டுமல்ல; இறைவார்த்தை நமது அன்றாட வாழ்வின் ஓர் அங்கமாக மாற வேண்டும் என்பதையும் வலியுறுத்தியது.

அவர் கேட்ட ஒரு கேள்வி பலருடைய இதயங்களைத் தொட்டது: “உங்களில் எத்தனை பேர் திருவிவிலியத்தை முழுமையாக வாசித்து முடித்துள்ளீர்கள்?” அந்த எளிய கேள்வி நாள் முழுவதும் பலருடைய மனதில் ஒலித்துக்கொண்டே இருந்தது. அது நம்மை நின்று சிந்திக்கச் செய்தது: இறைவார்த்தையை நாம் உண்மையில் எவ்வளவு நன்றாக அறிந்திருக்கிறோம்? திருவிவிலியத்தை தியானிக்க நாம் எவ்வளவு நேரம் செலவிடுகிறோம்?

திருவிவிலிய தியானிக்க ஒரு கடினமான பணியாகக் கருதாமல், இறைவனை இன்னும் ஆழமாக அறிந்துகொள்ளும் ஒரு பயணமாகக் காணுமாறு சகோதரர் மேத்யூ ஊக்கமளித்தார். மேலும், அனைவரும் மத்தேயு நற்செய்தியிலிருந்து வாசிக்கத் தொடங்குமாறு அவர் அறிவுறுத்தினார். இன்னொரு நாளுக்காகக் காத்திருக்காமல், முதல் அடியை இன்றே எடுத்து வைக்குமாறு அவர் அழைப்பு விடுத்தார். அவருடைய வார்த்தைகள் ஒரு புதிய ஊக்கத்தின் தீப்பொறியாக அமைந்தன.

திருவிவிலியம் அலமாரியில் வைக்கப்படும் ஒரு சாதாரண புத்தகம் மட்டுமல்ல என்பதை இந்த நிகழ்ச்சி நமக்கு நினைவூட்டியது. அது வழிகாட்டுதல், வலிமை, நம்பிக்கை மற்றும் மாற்றத்தை அளிக்கும் இறைவனின் உயிருள்ள வார்த்தையாகும். ஒரே சமூகமாக ஒன்றுகூடுவதற்கான இந்த வாய்ப்பை அளித்த இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

ஊக்கமளிக்கும் மற்றும் சிந்திக்கத் தூண்டும் பகிர்வை வழங்கிய சகோதரர் மேத்யூ அவர்களுக்கும், இந்த நாளை உண்மையிலேயே சிறப்பாக்கிய புனித அந்தோணியார் ஆலயம், ஈப்போ, பிடோர் மற்றும் தைப்பிங் பங்குகளைச் சேர்ந்த அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாள் முழுவதும் பெற்ற செய்தியை அமைதியாகச் சிந்தித்து, இயேசுவின் முன்னிலையில் தங்குவதற்கான அரிய வாய்ப்பை அனைவருக்கும் வழங்கும் வகையில், நிகழ்ச்சி நற்கருணை ஆராதனையுடன் நிறைவுற்றது. இந்த நிகழ்ச்சி நடைபெற அனுமதி வழங்கிய எங்கள் பங்குத்தந்தை அருட்பணி மைக்கேல் தாஸ் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த நிகழ்ச்சி வழி நாம் திருவிவிலியத்தைத் திறந்து வாசிக்கும்போது, இறைவார்த்தை நமது இதயங்களோடு பேச அனுமதிப்போமாக. இறைவார்த்தை நம்மில் வாழ்ந்து, ஒவ்வொரு நாளும் நம்மை வழிநடத்தி மாற்றமளிக்கட்டும்.

குழந்தையம்மாள்
தெலுக் இந்தான்



பொதுக்காலம் ஆண்டின் 28 ஆம் ஞாயிறு – 11-10-2026

எசாயா 25:6-10; திபா 23:1-3 a. 3b-4. 5. 6
பிலிப்பியர்: 4:12-14,19-20; மத்தேயு 22:1-14

விண்ணரசின் அழைப்பும் தகுதியும்

அன்பு சகோதர சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் இறைஇயேசுவின் வல்லமைமிக்கப் பெயரால் வாழ்த்துகளும் இறைவேண்டல்களும் உரித்தாகுக.

இன்றைய ஞாயிறு வாசகங்கள் அனைத்தும் இறைவன் தரும் நிலைவாழ்வின் விருந்தைப் பற்றியும், அதற்கான நாம் கொண்டிருக்கவேண்டிய தகுதியைப் பற்றியும் நமக்கு எடுத்துரைக்கின்றன.

முதல்வாசகம் எசாயா நூலில் ஆண்டவர் அனைத்து மக்களினங்களுக்கும் ஓர் உயரிய விருந்தை அளிக்கிறார் என நாம் பார்க்கிறோம். இது கடவுளே தருகின்றார். இதனால் மக்கள் வற்றாத நிறைவையும் மகிழ்ச்சியையும் அனுபவிப்பார்கள் என்று குறிக்கிறது. மேலும் நம்முடைய அழுகையையும் மரணத்தையும் ஒழித்து, மக்களின் கண்ணீரைத் துடைத்துவிடுவார். நீண்ட நாள் காத்திருப்பின் பலனை நமக்கு ஆண்டவர் தருகிறார் என்று வாசிக்கிறோம். "இவருக்காகவே நாம் காத்திருந்தோம்; இவர் தரும் மீட்பில் மகிழ்ந்து அக்களிப்போம்" என்னும் வார்த்தைகள், இறை நம்பிக்கையில் பொறுமையோடு காத்திருப்போருக்கு இறைவன் தரும் விடுதலையைச் சுட்டிக்காட்டுகின்றன.

இரண்டாம் வாசகத்தில் மனநிறைவும் கிறிஸ்து தரும் ஆற்றலும் சூழிலைகளைக் கடந்த மனப்பக்குவத்தைப் பற்றியும் புனித பவுல் கூறுகிறார். வறுமையோ வளமையோ, பசியோ நிறைவோ எந்தச் வழலிலும் வாழப் பழகிக் கொண்டதாக அவர் கூறுகிறார். உலகப் பொருட்கள் நம் மகிழ்ச்சியைத் தீர்மானிக்கக் கூடாது என்பதை இது கற்பிக்கிறது."எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைக்கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு" என்ற பவுலின் நம்பிக்கை அறிக்கை, சோதனைகள் மற்றும் சவால்களின் போது இறைவனையே நமது பலமாகக் கொள்ள ஊக்கமளிக்கிறது.

இன்றைய நற்செய்தி வாசகத்திலும் முதல் வாசகத்தில் கூறப்பட்ட விருந்தை ஒட்டிய விடயத்தைக் காண்கிறோம். ஆனால் முதன்முதலில் அழைக்கப்பட்டவர்கள் உலகக் காரியங்களில் மூழ்கி வர மறுத்ததால், அரசர் வழியோரத்தில் கண்ட "நல்லோர், தீயோர்" என அனைவரையும் அழைக்கிறார். கடவுளின் அருள் அனைவருக்கும் நிபந்தனையன்றித் திறக்கப்பட்டுள்ளது.

இன்றைய நற்செய்தியின் முக்கிய சிந்தனை:

திருமண ஆடையின் முக்கியத்துவம்: விருந்துக்கு வந்தவன் 'திருமண ஆடை' அணியாததால் புறம்பே தள்ளப்படுகிறான். வெறும் பெயர் கத்தோலிக்கராக இருப்பது மட்டும் போதாது; ஆடை என்பது நம் உள்ளத்தின் மனமாற்றம், புனிதமான வாழ்வு மற்றும் நற்செயல்களைக் குறிக்கிறது.

இறைவனின் அழைப்பை ஏற்பது மட்டும் போதாது; 'திருமண ஆடை' என்பது மனிதரின் மனமாற்றம், திருமுழுக்கு அருள், மற்றும் நம்பிக்கையோடு கூடிய நற்செயல்களைக் குறிக்கிறது.

பொறுப்புணர்வும் எச்சரிக்கையும்: "அழைப்புப் பெற்றவர்கள் பலர், ஆனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களோ சிலர்." இறைவனின் அழைப்பை ஏற்பது நமது உரிமை என்றால், அதற்கேற்ப தகுதியோடு வாழ்வது நமது பொறுப்பாகும்.

பொதுவான அழைப்பு: கடவுளின் மீட்பு அழைப்பு முதலில் இஸ்ரயேல் மக்களுக்கு விடுக்கப்பட்டது; ஆனால் இயேசுவின் வழியே அது இப்போது மதம், சாதி, இன வேறுபாடின்றி அனைத்து மக்களுக்கும் ("நல்லோர், தீயோர்") திறக்கப்பட்டுள்ளது.

இறைத்தீர்ப்பு: கடவுளின் அருளைப் பெற்றுக்கொண்டு, அதற்கேற்ப தங்கள் வாழ்வை மாற்றிக் கொள்ளாதவர்கள் இறுதிக்காலத்தில் அவரின் நியாயத் தீர்ப்புக்கு உள்ளாவார்கள்.

ஜோஸ்பின் போஸ்கோ, சிரம்பான்

பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்

உங்கள் பங்குகளில் நடைபெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.